**கவனிக்க.**– *2006.12.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1479 - 2007 ජනවාරි 05 වැනි සිකුරාදා - 2007.01.05

*1479 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | – |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | – |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 2 |
| விலைக்கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | – |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 13 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, சனவரி 12 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, திசெம்பர் 29 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. - பீ 277/40

**(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருட்கள் கட்டளைச் சட்டம்**

19 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காகப் பின்வரும் நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னங்களாக இருக்கவேண்டுமென வெளிப்படுத்திச் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் கட்டளை ஒன்றை ஆக்குவதற்குக் கருதப்படுகின்றதென கலாசார தேசிய மரபுரிமை அமைச்சரினால் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

மஹிந்த யாப்பா அபேவர்தன.
எகலாசார தேசிய மரபுரிமை பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.12.06.

**பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக வெளிப்படுத்தப்படவேண்டிய நினைவுச் சின்னங்கள்**

1. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், கந்தேகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கந்துபொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கசலா ஆரண்ய சேனாசன வளவில் அமைந்துள்ள லென் லிப்பிய உள்ளடக்கப்பட்ட கட்டாரம் செதுக்கப்பட்ட பழைய இரண்டு பொய்கை.

2. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், ஹிரிபொக்குண கிராம உத்தியோகத்தர் பிரிவில், நிக்கபிட்டிய கிராமத்தில் அமைந்த பன்சல்வத்த ஹேன காணிக்குரிய பழைய போயகெய மற்றும் கற்தூண்களைக் கொண்ட நிலம்.

3. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், முனிஹிரிகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கல்கந்த கிராமத்தில் அமைந்துள்ள வெஹெரகல விஹாரை வளவில் உள்ள தொன்மை வாய்ந்த கட்டிடங்கள் இரண்டும் பொய்கையும்.

4. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், கந்தேகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், கந்தே மெதகம மகா சேத்தியகிரி விஹாரை வளவில் உள்ள தாதுகோபுரம், போதியகெய, பாதுகாக்கப்படட இரண்டு கட்டிடங்கள் கட்டாரம் செதுக்கப்பட்ட லென் விஹாரை, லென்விபி குகை மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள புராதன எச்சங்கள்.

5. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், கந்தே மெதகம கிராம உத்தியோகத்தர் பிரிவில், மெதகம கந்தேயில் உள்ள விஜய கல்லறை.

6. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ஹெட்டிபொல பிரதேச செயலாளர் பிரிவில், பமுனுகொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், பமுனுகொல்ல பத்தலகொட குளக்கரையில் உள்ள தாதுகோபுரமும், டம்பிட்டி விஹாரைக்குரிய சிதைவுகளும்.

7. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவில், மலகனே கிராம உத்தியோகத்தர் பிரிவில், உள்ள வலகம்பா புராதன விஹாரைக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட லென் விஹாரையும், புராதன மதிலும்.

8. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவில், நேட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில், நுவரகந்த புராதன விஹாரை பூமிக்குரிய புராதன சைத்திய பாதம, ஆசன்சரய புராதன கல்வெட்டுக்கள், பிராக்மிய எழுத்துக்களைக் கொண்ட குகை மற்றும் லென் விஹாரை.

9. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 604, நாஹல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நாஹல்ல புராதன அம்பலம்.

10. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 604, நாஹல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், பொல்கும்புர சாகல்லி புர புராதன விஹாரைக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட 5 கற்குகைகளும் பாறை கல்வெட்டு கற்தூண்களும்.

11. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 569, தெல்விட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தெல்விட்ட புராதன விஹாரை வளவில் உள்ள சிலை மண்டபம்.

12. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், கனேகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில், பானகமுவ பாம்பருவ புராதன விஹாரைக்குரிய, புராதன சிலை மண்டபமும், கட்டாரம் செதுக்கப்பட்ட மூன்று குகைகளும்.

13. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், கனேகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில், வெஹெரகொட புராதன விஹாரை பூமிக்குரிய சைத்திய கொடல்ல மற்றும் கற்தூண்கள்.

14. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், பஹல ஒகொடபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில், வில்கம் வெஹெர புராதன விஹாரை வளவில் உள்ள சைத்திய கொடல்ல கற்தூண்கள், கற்பாறையில் செதுக்கப்பட்ட படிக்கட்டுக்கள்.

15. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 586, மஹவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில், பாதெனிய கிராமத்தில் அமைந்துள்ள வில்கம் வெஹெர மற்றும் புராதன விஹாரை வளவில் அமைந்துள்ள கல்வெட்டுக்கள், புராதன தாது கோபுரம், அதனைச் சூழவுள்ள புராதன சிதைவுகள்.

16. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 624, அக்கர பணஹ கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள அலவல கிராமத்துக்குரிய அலவல கல்வெட்டு.

17. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 603, ரம்படகல்ல கிராமத்தில் அமைந்துள்ள பெத்கமயாய தொல் பொருளாய்வு இடத்துக்குரிய நான்கு கல்வெட்டுக்களும், கட்டாரம் செதுக்கப்பட்ட 5 குகைகளும் உட்பட ஏனைய தொல் பொருள்கள்.

18. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 601, ஓகொடபொல கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கொட்டங்க கிராமத்துக்குரிய கொட்டங்க கல்வெட்டு.

19. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 539, கொட்டுஹேன கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ விசுத்தாராம புராதன விஹாரை வளவுக்குரிய புராதன தூபியும் கட்டிட சிதைவுகளும்.

20. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவில், வத்துவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில், ஸ்ரீ சுனந்தாராம விஹாரை வளவில் அமைந்துள்ள டம்பிட்டிய விஹாரையும், போய சீமா எல்லைக்குள் இருக்கும் தாதுகோபுரமும்.

21. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், ஹொரவடுவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில், ஸ்ரீ சுதர்சன சைலபிம்பாராம புராதன விஹாரை பூமிக்குரிய புராதன சிலை மண்டபம்.

22. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், கட்டுபொத்த பிரதேச செயலாளர் பிரிவில், திஸ்ஸவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், கும்புக்வெவ, ஸ்ரீ நாகருக்காராம விஹாரை வளவில் உள்ள டம்பிட்டி விஹாரை.

23. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 489, தொலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தொலுவ ரங்கிரிமட ரஜமஹா விஹாரை வளவில் உள்ள கட்டாரம் செதுக்கப்பட்ட குகை. திக்கெய அமைந்துள்ள குகையில் புத்தரின் புனித பாதம் மற்றும் குகை செதுக்கல்களைக் கொண்ட குகை.

24. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், பண்டாரகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள பண்டாரகல போகஹ முல்வத்த, கலுகல என்னும் இடத்தில் அமைந்துள்ள கல்வெட்டும், கனுபாதம் கல் கட்டிட சிதைவுகளும், புராதன தாதுகோபுரமும்.

25. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பொல்பித்திகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 343, சாலியகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மங்களாராம கனேகந்த ரஜமஹா விஹாரை வளவுக்குரிய கண்டி யுகத்தின் ஓவியங்கள் கொண்ட சிலை மண்டபம் மற்றும் கல்வெட்டுக்களை உள்ளடக்கிய சகல குகைகளும் மற்றும் பாறையில் செதுக்கப்பட்டுள்ள புத்த பெருமானின் புனித பாதம் கற்தூண்களும் மற்றும் தாது கோபுரமும்.

26. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாஸ்பொத்த பிரதேச செயலாளர் பிரிவில், ஒக்கமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கலுகல்ல கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நீலகிரி ரஜமஹா விஹாரை வளவுக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட கட்டாரம் லென, பாறையின் உச்சியில் உள்ள சைத்திய சின்னங்களும், கந்த பிரதேசத்தில் பரந்துள்ள ஏனைய தொல்பொருள் சின்னங்களும்.

27. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், ரஸ்நாயக்கபுர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 267 கிராம உத்தியோகத்தர் பிரிவில், ஹேனேகெதர பிரிவில் துண்டு இல. 80 கொண்ட கலுகல் உள்ள பிரதேசத்தில் அமைந்த கட்டாரம் செதுக்கப்பட்ட குகையும், தாதுகோபுரமும்.

28. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாகோ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 166, கோன்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், வதகஹகல விஹாரைக்குரிய புராதன சிலை மண்டபம்.

29. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாகோ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 206, பொத்துவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் குருகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ சாக்யமுனி விஹாரை வளவுக்குரிய புராதன கற்தூண்கள் கொண்ட சின்னங்கள்.

30. வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், மாகோ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 138, கட்டம்புவாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், தியபெட்டே புராதன விஹாரை பூமிக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட லென் விஹாரையும் 2 கல்வெட்டுக்களும், பாறைகளில் செதுக்கப்பட்ட 4 கல்வெட்டுக்களும்.

31. வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 524, மஹாவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மஹாவெவ நாகாராம புராண விஹாரைக்குரிய டம்பிட்டி விஹாரை.

32. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், ராஜவீதிய கிராமத்தில் அமைந்துள்ள பிரித்தானிய ஆட்சிக்குரிய நிர்வாக உத்தியோகத்தரின் வாசஸ்தலம்.

33. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேபொல வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வேலுவனாராம புராண விஹாரை வளவில் உள்ள சிலை மண்டபமும் அட்டுவையும்.

34. மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவில், நாகொல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய புராதன பின்தாலிய.

35. மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், ஹங்குரன்கெத்த பிரதேச செயலாளர் பிரிவில், கொட்டல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய புனித எம்மானுவேல் தேவாலயம்.

36. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பிரிவில், உடவெல உடகம கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ஹெந்தான ரஜமஹா விஹாரை வளவுக்குரிய புராதன சிலை மண்டபமும், ஆவாச மண்டபமும்.

37. மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவில், கடுகண்ணாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடுகண்ணாவ நகரத்தில் உள்ள டோசன் கோபுரம்.

38. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹங்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 432 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அன்வில்வத்த எனும் காணியில் உள்ள சீதா லென என்று அழைக்கப்படும் கட்டாரம் செதுக்கப்பட்ட கற்குகை.

39. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், ஹேன்பிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் எம்புல்கம ரஜமகா விஹாரை பூமிக்குரிய உடமலுவையில் உள்ள கட்டாரம் செதுக்கப்பட்ட இரண்டு கற்குகைகளும் பஹத்த மலுவையில் அமைந்துள்ள புராதன ஆவாச மண்டபமும்.

40. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவில், கூரகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் கூரகல மலையில் உள்ள வரலாற்று ரீதியிலான மானிட குடியேற்றங்கள் இருந்ததாகக் கருதப்படும் இயற்கைக் குகை.

41. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், மத்திய கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், மாளிகாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடி மற்றும் ஹுசேன் லெப்பே என்பவரின் கல்லறை, மஸ்த்தான் மௌலானாவின் கல்லறை மற்றும் எண் வடிவமான கல்லறை.

42. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், பான்ஸ் பிரதேசத்தில் உள்ள பான்ஸ் ஹோல் காணியில் இருக்கும் பழைய வீடு.

43. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், புளத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவில், இல. 817/ஏ பஹல குடலிகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் புலத்வத்துகந்த எனும் மலையில் கற்பாறையின் மீது அமைந்துள்ள பாதம் கற்தூண்களைக் கொண்ட கட்டிட சிதைவுகள்.

44. மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், அகலவத்த பிரதேச செயலாளர் பிரிவில், கல்வல கிராமத்தில் ஹல்வல மலை உச்சியில் அமைந்துள்ள பவுரே கந்த புராதன விஹாரை வளவுக்குரிய புராதன சிலை மண்டபம்.

45. மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில், கிரிகுலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ சுபோதாராம புராண விஹரைக்குரிய சிலை மண்டபம்.

46. மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், தொம்பே பிரதேச செயலாளர் பிரிவில், சமனபெத்த 416 ஏ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கனே உட ரஜமஹா விஹாரைக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட கற்குகையும், பொய்கையும், படிக்கட்டுக்களும், கல்வெட்டுக்களும்.

47. தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், ஒக்கேவெல பிரதேச செயலாளர் பிரிவில், ஹீனட்டிகஹமுன கிராம உத்தியோகத்தர் பிரிவில் கொட்டாவ ஸ்ரீசுபத்ராராம விஹாரை வளவுக்குரிய பழைய சிலை மண்டபம்.

48. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், கடேவீதிய கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அனகாரிக்க தர்மபால மாவத்தையில் வரியிறுப்பு இல. 26 இடத்திலுள்ள பழைய வீடு (ஆராச்சி வளவ்வ).

49. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், உயன்வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தாரகா கோட்டைக்கு அருகில் உள்ள பழைய மதிலும் வெடிபொருட்கள் களஞ்சியமும்.

50. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 433 சி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தெவிநுவர சிங்காசன மாவத்தையில் வரியிறுப்பு இல. 40, திரு. பி. எம். கனகரத்ன டி சில்வாவுக்குரிய பழைய வீடு (ரேன்தகெதர).

51. தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், பலல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள வெலிகந்த கோவிலகந்த புராண விஹாரை வளவுக்குரிய புராதன இல்லம்.

52. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 25, மத்திய எல்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் கனேகொட ரஜமஹா விஹாரை வளவில் உள்ள விக்ரம மண்டபமும் தர்மசாலா மண்டபம், சைத்திய பொய்கை, கல்வெட்டுத் தூண்கள்.

53. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவில், பொன்ஸ்வீட்டா 137 பீ கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள ரூமஸ்சல பழைய கோபுரம்.

54. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில், வவுலாகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் கோனபீனுவல ஸ்ரீ சைலாகூட்டாராம புராண கல்லென் விஹாரை பூமிக்குரிய கட்டாரம் செதுக்கப்பட்ட லென் விஹாரையும் பழைய சைத்தியவும்.

55. தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவில், கத்தலுவ கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள அட்டதாகே வளவ்வ மற்றும் மதில்.

56. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில், இரத்தினபுரி நகரம் மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள இரத்தினபுரி பண்டாரநாயக்க மாவத்தையில் வரியிறுப்பு இல. 4 கொண்ட இடத்தில் உள்ள பழைய கட்டிடம்.

57. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில், இரத்தினபுரி நகரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள பிரான்க் ஹெட்டிஆரச்சி மாவத்தையில் 1/1 இலக்க வரியிறுப்பு இலக்கத்தில் அமைந்துள்ள பழைய கட்டிடம்.

58. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில், இரத்தினபுரி நகர சபை கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள இரத்தினபுரி ஒலந்த கோட்டையில் உள்ள வரியிறுப்பு 58/1 ஆம் இலக்க இடத்தில் உள்ள பழைய கட்டிடம்.

59. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவில், வெரலுப்ப கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தேவாலகாவ கல்கடுவ புராண கல்லென் விஹாரை.

60. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், பலல்கொட பிரதேச செயலாளர் பிரிவில், கோன்காஸ் மல்கட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வெலியத்த புஹுல்யாய புராதன கல்லென் விஹாரைக்குரிய பிராக்மிய எழுத்துக்களைக் கொண்ட கட்டாரம் செதுக்கப்பட்ட கற்குகை.

61. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், பலல்கொட பிரதேச செயலாளர் பிரிவில், தியவின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் கனேலந்தகம தியவின்ன தேவகிரி புராதன கற்குகை விஹாரை வளவில் உள்ள பழமை வாய்ந்த லென் விஹாரையும் கட்டாரம் செதுக்கப்பட்ட இரண்டு குகைகளும்.

62. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், பலல்கொட பிரதேச செயலாளர் பிரிவில், மஹவெலதென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மஹாவெல தென்ன ஸ்ரீ சந்ரசேக்கர முதலிந்தராம புராதன விஹாரை வளவுக்குரிய பழைய விக்கிரக மண்டபமும் ஹேவிசி மண்டபமும்.

63. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில், மடுவன்வல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தெதரன்கமுவ கிராமத்துக்குரிய மடுவன்வல பரம்பரையின் கல்லறை.

64. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில், மடுவன்வல கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய திகவெலகொட கிராமத்துக்குரிய தாதுகோபுரம்.

65. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில் புராண விஹாரைக்குரிய (அத்ததாராம புராண விஹாரை) பழமைவாய்ந்த புத்தர் சிலை.

66. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில், இல. 210, தாபனே கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஸ்ரீ ஜயசுந்தராராம ரஜமஹா விஹாரை வளவில் இருக்கும் டம்பிட்ட விஹாரை.

67. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொலொன்ன பிரதேச செயலாளர் பிரிவில், இல. 208, கம்புருகமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹல்வின்ன ஸ்ரீ ஜயமஹா விஹாரை பூமிக்குரிய பழமை வாய்ந்த புராண விஹாரை.

68. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், பெல்மதுளை பிரதேச செயலாளர் பிரிவில் பனாவென்ன அபயதிலக்காராம புராண விஹாரை வளவுக்குரிய ஓவியங்கள், சிற்பங்கள் கொண்ட விக்ரம மண்டபம்.

69. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், கொடக்கவெல பிரதேச செயலாளர் பிரிவில், மாகந்துர கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மாகந்துர புராண விஹாரை வளவுக்குரிய பழமைவாய்ந்த ஓவியங்கள், சிற்பங்கள் கொண்ட விக்ரம மண்டபமும் ஆவாச மனையும், மதிலும்.

70. சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், மாவனெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், மாகந்துர கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹிங்குல ரஜமஹா விஹாரைக்குரிய டம்பிட்டிய விஹாரை.

71. ஊவா மாகாணத்தில், பதுளை மாவட்டத்தில், பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், பூனாகல கிராம உத்தியோகத்தர் பிரில் உள்ள ப்ரோட்டன் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ப்ரோட்டன் பங்களா, மாட்டுத்தொட்டி மற்றும் அலுவலகக் கட்டிடமும்.

72. கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தில், மஹாஓயா பிரதேச செயலாளர் பிரிவில், வென்னீர் ஊற்று கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வெஹெரகல கிராமத்துக்குரிய கடடாரம் செதுக்கப்பட்ட கற்குகைகளும், பாறை கல்வெட்டும் புராதன தூபியும்.

73. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 87, கோதமிபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கோத்தமி விஹாரை வளவுக்குரிய புராதன ஓவியங்கள், சிற்பங்கள் அடங்கிய விஹாரை பூமி.

குறிப்பிட்ட கட்டளை பிறப்பிப்பது சம்பந்தமாக எதிர்ப்புகள் இருப்பின் 2007 சனவரி மாதம் 19 ஆந் திகதிக்கு முன் கொழும்பு, தொல்லியல் பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்புதல் வேண்டும். அப்படியான எதிர்ப்புகள் எழுத்து மூலமாவது இருத்தல் வேண்டும். அந்த எதிர்ப்புகள் எக் காரணத்தைக் கொண்டு என்பதை காண்பிக்கும் விபரங்கள் அதில் உள்ளடங்க வேண்டும்.

1-24

---

## அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டம்

(283) ஆம் அத்தியாயமான) அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ் அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தால் ஆக்கப்பட்டு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

கொழும்பு,
2006

### விதி

காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவையும் 2004, மே 14 ஆந் தேதிய 1341 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவையுமான 1892, யூன் 17 ஆம் தேதிய 5147 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன:-

(1) அத்தியாயம் 1 - பொதுவிதிகள் என்னும் தலைப்பின்கீழ்-

(அ) விதி 1 (i) என்பதில் "வயது 35 ஆண்டுகள் அல்லது அதற்குக் குறைவாக" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "வயது 40 ஆண்டுகள் அல்லது அதற்குக் குறைவாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) விதி 1 (i) (அ) என்பதனை நீக்கம் செய்வதன் மூலமும் ;

(இ) விதி (ii) என்பதில் "வயது 35 ஆண்டுகள் அல்லது அதற்குக் குறைவாக" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக, "வயது 40 ஆண்டுகள் அல்லது அதற்குக் குறைவாக" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும் ;

(ஈ) விதி 13 (ii) என்பதில் கடன் உரித்துடைமை என்னும் தலைப்பின்கீழ் 1 முதல் 7 வரையிலான விடயங்களுக்குப் பதிலாகப் பின்வரும் விடயங்களை இடுவதன்மூலமும் ;

**கடன்பெறும் உரிமை**

| *அங்கத்துவம்* | *5% இற்குக் குறைந்த சந்தாப்பணம்* | *5% அல்லது அதற்குக் கூடிய சந்தாப்பணம்* | *திருப்பிச் செலுத்துவதற்கான தவணைப்பண எண்ணிக்கை* | *பிற தேவைப்பாடுகள்* |
|---|---|---|---|---|
| 1. ஆறு மாதங்களுக்குக் குறையாத ஆனால் 12 மாதங்களுக்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் | ரூபா 1,500 | ரூபா 3,000 | 10 | உறுதிப்படுத்துவதற்கு அவசியமில்லை |
| 2. ஒரு ஆண்டிற்குக் குறையாத ஆனால் 3 ஆண்டுகளுக்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் | ரூபா 3,000 | ரூபா 5,000 | 20 | உறுதிப்படுத்துவதற்கு அவசியமில்லை |
| 3. மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் 5 ஆண்டுகளுக்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் | இரண்டு மாத திரட்டியச் சம்பளம் (அதிகபட்சம் ரூபா 20,000) | மூன்று மாத திரட்டியச் சம்பளம் (அதிகபட்சம் ரூபா 25,000) | 48 | சேவையில் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் அத்துடன் சந்தாத்தொகை 5% வீதப்படி தொடர்ந்து செலுத்தப்படுதல் வேண்டும். |
| 4. ஐந்து ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் 7 ஆண்டுகளுக்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் | நான்கு மாத திரட்டிய சம்பளம்/ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 35,000) | ஐந்து மாத திரட்டிய சம்பளம்/ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 40,000) | 48 | சேவையில் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் கடன் வரவிலுள்ள தொகை யின் அரைவாசிக்கு மட்டுப்படுத்தப்படு கின்றது. சந்தாத் தொகை தொடர்ந்து 5% வீதப்படி செலுத்தப்படுதல் வேண்டும். |
| 5. ஏழு ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் 12 ஆண்டுகளுக்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் | ஆறு மாத திரட்டிய சம்பளம்/ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 50,000) | எட்டு மாத திரட்டிய சம்பளம்/ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 60,000) | 48 | சேவையில் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் கடன் வரவிலுள்ள தொகை யின் அரைவாசிக்கு மட்டுப்படுத்தப்படு கின்றது. சந்தாத் தொகை தொடர்ந்து 5% வீதப்படி செலுத்தப்படுதல் வேண்டும். |
| 6. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட அங்கத்தவர் ஒருவர் | ஆறு மாத திரட்டிய சம்பளம்/ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 70,000) | எட்டு மாத திரட்டிய சம்பளம்/ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 75,000) | 48 | சேவையில் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் கடன் வரவிலுள்ள தொகை யின் அரைவாசிக்கு மட்டுப்படுத்தப்படு கின்றது. சந்தாத் தொகை தொடர்ந்து 5% வீதப்படி செலுத்தப்படுதல் |

| அங்கத்துவம் | 5% இற்குக் குறைந்த சந்தாப்பணம் | 5% அல்லது அதற்குக் கூடிய சந்தாப்பணம் | திருப்பிச் செலுத்துவதற்கான தவணைப்பண எண்ணிக்கை | பிற தேவைப்பாடுகள் |
|---|---|---|---|---|
| | | | | வேண்டும். |
| 7. ஐம்பத்தைந்து வயதை அடைவதற்கு முன் ஓய்வு பெற்றவரும் அவர் ஐம்பத்தைந்து வயதைப் பூர்த்தி செய்யும் வரை சந்தாத் தொகைக்கு எதிராக கடனை எதிரீடு செய்துள்ளவருமான அங்கத்தவர் ஒருவர் | நான்கு மாத ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 15,000) | ஐந்து மாத ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 30,000) | 48 | அறவீடுகள் ஓய்வூதியத் திலிருந்து செய்யப் படுதல் வேண்டும் உதவு தொகைக் கடன் வரவிலுள்ள தொகையின் அரை வாசிக்கு மட்டுப்படுத்த ப்படுகின்றது. உதவு தொகை 5% வீதப்படி தொடர்ந்து செலுத்தப் படுதல் வேண்டும். |
| 8. சந்தாப்பணம் செலுத்துப வரும் 14 ஆம் விதியின்கீழ் கடன்பெற்றிராதவருமான அங்கத்தவர் ஒருவர் | மூன்று மாத ஓய்வூதியம் (அதிகபட்சம் ரூபா 25,000) | — | 48 | 14 ஆம் விதியின்கீழ் கடன்களுக்கு உரித்துடையவர் அல்லர், தவணைப் பணம் ஓய்வூதியத்தி லிருந்து அறவிடப் படும். |

(உ) விதி 13 (V) (அ) என்பதில் "முப்பத்தாறு (36) தொடர்ச்சியான மாதாந்தத் தவணைப் பணங்களுக்கு மேற்படாத" என்னும் சொற்களுக்கும் இலக்கத்துக்கும் பதிலாக "நாற்பத்தெட்டு (48) தொடர்ச்சியான மாதாந்த தவணைப் பணங்களுக்கு மேற்படாத" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் இடுவதன் மூலமும் ;

(ஊ) அதன் 13இ என்னும் விதிக்குப் பதிலாக பின்வரும் வரியை இடுவதன் மூலம் :-

"13இ. உறுப்பாண்மையில் ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ள உறுப்பினர் எவருக்கும் அடுத்தடுத்துவரும் பத்து (10) மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகளில் மீளச் செலுத்தப்படற்பாலதான ரூபா 5000 பண்டிகைக் கடனொன்று வழங்கப்படலாம்."

(எ) விதி 13ஊ என்பதனை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் :-

"13எ.ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியான உறுப்பாண்மையுடைய உறுப்பினர் எவருக்கும், அவரது பிள்ளை க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருக்கும் பட்சத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத (ரூபா 10,000) கடனொன்று வழங்கப்படலாம். அத்தகைய கடனானது, அத்தகைய பிள்ளை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது இலங்கை உயர்கல்வி நிறுவனமொன்றில் கல்வி பயில்வதனை உறுதிப்படுத்தி அத்தகைய பல்கலைக்கழகத்தால் அல்லது உயர்கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழொன்று முன்வைக்கப்படுவதன்மீது வழங்கப்படுதல் வேண்டும். இக்கடன் ஆண்டொன்றுக்கு 10 சத வட்டி வீதத்துடன் 36 சமமான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும் :

ஆயினும் எவ்வாறாயினும் உறுப்பினரின் மாதச் சம்பளத்தின் ஆகக் கூடியது 40% கழிப்பனவு வரையறைக்கமைய அவரது

மாதச் சம்பளத்திலிருந்து தவணைக் கொடுப்பனவுகளை கழிப்பனவு செய்யும் சாத்தியக்கூற்றை கருத்திற்கொண்டதன் பின்னர் மட்டுமே இக்கடன் வழங்கப்படுதல் வேண்டும்." ;

(ஏ) விதி 14 (2) என்பதனை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலம் :-

14 (3) (i) ஐந்து வருடங்களுக்கு மேல் செல்லுபடியான உறுப்பாண்மையொன்றைக் கொண்டிருக்கும் எவரேனும் உறுப்பினருக்கு, அவர் பாரதூரமான சுகயீனத்தால் பீடிக்கப்பட்டிருக்குமிடத்து ஐம்பதாயிரம் ரூபாவை (ரூபா 50,000) விஞ்சாத நன்கொடையொன்று வழங்கப்படுவது சட்டமுறையானதாதல் வேண்டும்.

(ii) அரசாங்க மருத்துவத் தொழிலர் ஒருவரிடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனமொன்றிடமிருந்து சான்றிதழொன்று முன்வைக்கப்படுவதன்மீது அத்தகைய உறுப்பினருக்கு நன்கொடையொன்றை வழங்குவதனைப் பற்றி முகாமைக்குழு முடிவு செய்தல் வேண்டும்.

(iii) மருத்துவ தொழிலரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று ஊழியரின் சுகயீனத்தின் பாரதூரத் தன்மையைக் குறிப்பிடுதலுடன் அத்தகைய சுகயீனத்தைக் குணப்படுத்துவதற்கான மேலதிக சிகிச்சையை விதந்துரைத்தலும் வேண்டும்.

(iv) "மருத்துவ நன்கொடை நிதியம்" என அறியப்படும் நிதியமொன்றைத் தாபித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும். இதில் கழகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் ரூபா பத்தை (ரூபா 10) வரவு வைத்தல் வேண்டும்."

(ஐ) விதி 15 (1) என்பதில் "கடன்தொகை சந்தாப்பணத்தில் பற்றுவைக்கப்பட வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கடன்தொகை அவரது சந்தாப் பணங்களிலும் பங்கிலாபங்களிலும் வட்டியிலும் பற்றுவைக்கப்பட வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

1-41

---

## கிராமப் பெயர்களை மாற்றல்

கீழே தரப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் கிராமப் பெயர், இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, மாற்றப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கலாநிதி சரத் அமுனுகம,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2006, திசெம்பர் 06.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | முதலாம் அட்டவணை | இரண்டாம் அட்டவணை |
|---|---|---|---|---|
| குருநாகலை | வாரியபொல | 1241 எம்பவ | ரதாகம | ரன்சிரிகம |

01- 58

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"டெலிகொம் சிடி (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கி விடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2003.12.29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "டெலிகொம் சிடி (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "டெலிகொம் சிடி (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றி ஆராச்சி,
கம்பனி பதிவாளர்.

என். (பீஸீஎஸ்) 36186.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு - 10
2006, திசெம்பர் 05.

1- 05

---

## 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"பொனிக்ஸ் பெகேஜிங் (பிறைவேட்) லிமிட்டெட் " ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1991.02.27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "பொனிக்ஸ் பெகேஜிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "பொனிக்ஸ் பெகேஜிங் (பிரைவேட்) லிமிட்டெட்" கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாத விடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டி லிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றி ஆராச்சி,
கம்பனி பதிவாளர்.

என். (பீஸீஎஸ்) 7362.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு - 10
2006, திசெம்பர் 05.

1- 06

---

## 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"எல். எம். பயிங் ஒபீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1990.03.22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எல். எம். பயிங் ஒபீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "எல். எம். பயிங் ஒபீஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றி ஆராச்சி,
கம்பனி பதிவாளர்.

என். (பீஸீஎஸ்) 6241.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு - 10
2006, திசெம்பர் 05.

1- 07

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"அலுபப் ஹாட்வெயர் (பிரைவேட்) லிமிட்டெட் " நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1990.11.08 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "அலுபப் ஹாட்வெயர் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "அலுபப் ஹாட்வெயர் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றி ஆராச்சி,
கம்பனி பதிவாளர்.

என். (பீவீஎஸ்) 6961.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு - 10
2006, திசெம்பர் 05.

1- 08

---

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"ஜயபிம மல்டி டிரட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கி விடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1991.101.07 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஜயபிம மல்டி டிரட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ஜயபிம மல்டி டிரட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றி ஆராச்சி,
கம்பனி பதிவாளர்.

என். (பீவீஎஸ்) 8197.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு - 10
2006, திசெம்பர் 05.

1- 09

---

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"எட்கோ ரெப்ரெஜிரேசன் ஸ்பெயர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1991.10.15 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எட்கோ ரெப்ரெஜிரேசன் ஸ்பெயர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "எட்கோ ரெப்ரெஜிரேசன் ஸ்பெயர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாத விடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதி வேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றி ஆராச்சி,
கம்பனி பதிவாளர்.

என். (பீவீஎஸ்) 8235.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு - 10
2006, திசெம்பர் 05.

01- 10

---

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"எக்ரோ டெக்னிகா மாகடிங் லிமிட்டெட்" நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1991.12.02 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "எக்ரோ டெக்னிகா மாகடிங் லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "எக்ரோ டெக்னிகா மாகடிங் லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றி ஆராச்சி,
கம்பனி பதிவாளர்.

என். (பீவீஎஸ்) 305.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு - 10
2006, திசெம்பர் 05.
01- 11

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
***1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது***
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. ***ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.***

13. ***1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-***

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

***இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.***

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை-2007

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 05.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.12.2006 |
| | | வெள்ளி | 12.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.12.2006 |
| | | வெள்ளி | 19.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.01.2007 |
| | | வெள்ளி | 26.01.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.01.2007 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 02.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.01.2007 |
| | | வெள்ளி | 09.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.01.2007 |
| | | வியாழன் | 15.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.02.2007 |
| | | வெள்ளி | 23.02.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.02.2007 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 02.03.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.02.2007 |
| | | வெள்ளி | 09.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.02.2007 |
| | | வெள்ளி | 16.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2007 |
| | | வெள்ளி | 23.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2007 |
| | | வெள்ளி | 30.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.